**சுருக்கம்**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 21/1994) – நீலகிரி மாவட்டம் – உதகமண்டலம் மற்றும் கூடலூர் ஊராட்சி ஒன்றியங்களை பிரித்து குந்தா மற்றும் பந்தலூர் என இரண்டு புதிய ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டது – இறுதி ஆணை மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 21/1994) பிரிவு 15 உட்பிரிவு (3) மற்றும் (4)–ன்படி அறிவிக்கை – வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் [பரா–2(1)] துறை**

**அரசாணை (நிலை)எண்.19** | **நாள். 02.02.2026.**
**விசுவாவசு, தை – 19**
**திருவள்ளுவர் ஆண்டு 2057**
**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.340, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா–2(1)) துறை, நாள் 04.12.2025.
2. தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழ் எண். 803, நாள் 04.12.2025.
3. நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.ஊ5/00135/ 2025, நாள்.20.12.2025 மற்றும் 19.01.2026.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.69023/2023/ப.ரா.1.1, நாள் 24.12.2025 மற்றும் 19.01.2026.

-------

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தில் 26 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 12 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி குந்தா என்ற புதிய ஊராட்சி ஒன்றியமாக உருவாக்கியும் மற்றும் கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 9 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 13 கிராம ஊராட்சிகளை

உள்ளடக்கி பந்தலூர் என்ற புதிய ஊராட்சி ஒன்றியமாக உருவாக்கியும் அரசு ஆணையிட்டுள்ளது.

2. இதனை தொடர்ந்து, இரண்டாவதாக படிக்கப்பட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழ் எண். 803, நாள் 04.12.2025–இல் வெளியிடப்பட்ட அறிவிக்கையின் படி தமிழ்நாடு அரசிதழில் இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து ஆறு வாரங்களுக்குள் இந்த அறிவிக்கை குறித்த மறுப்பினை தெரிவிக்க விரும்பினால் எழுத்து மூலம் அரசுக்கு தெரிவிக்க வேண்டுமென்றும், அவ்வாறு அந்த உள்ளூர் வட்டார பகுதியில் குடியிருந்து வருகின்ற யாரிடமிருந்தும் மேலே கூறப்படும் காலக்கெடுவுக்குள் மறுப்பு ஏதும் பெறப்பட்டால் அதனை அரசு உரிய பரிசீலனை செய்யும்பொருட்டு எழுத்து மூலமாக அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவில் கீழ்க்காணும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது:

நீலகிரி மாவட்டத்திலுள்ள 38 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தை பிரித்து 26 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியம் என்ற ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 12 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி குந்தா என்ற புதிய ஊராட்சி ஒன்றியமாக உருவாக்கியும் மற்றும் 22 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தை பிரித்து 9 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி கூடலூர் ஊராட்சி ஒன்றியம் என்ற ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 13 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி பந்தலூர் என்ற புதிய ஊராட்சி ஒன்றியமாக உருவாக்கியும் அரசாணை வெளியிடப்பட்டது. 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 15 உட்பிரிவு (1)–ன் கீழ் தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டதை தொடர்ந்து மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதத்தில் உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தை பிரித்து உதகமண்டலம் மற்றும் குந்தா ஊராட்சி ஒன்றியமாகவும், கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தை பிரித்து கூடலூர் மற்றும் பந்தலூர் ஊராட்சி ஒன்றியமாகவும் என இரண்டு புதிய ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்குவதற்கு பொதுமக்களிடமிருந்து 04.12.2025 முதல் 16.01.2026 வரை எந்த மறுப்புகளும் பெறப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மேலும், மக்கள்தொகை கணக்கெடுப்பு பணி (Census) மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, சமுதாய வளர்ச்சி வட்டங்கள் (CD Blocks), ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட அதிகார வரம்பு மாற்றங்கள் 31.12.2025 முதல் அமலில் வரும் எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. எனவே, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதங்களின் அடிப்படையில் நீலகிரி மாவட்டத்திலுள்ள 38 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தை பிரித்து 26 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியம் என்ற ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 12 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி குந்தா என்ற புதிய

ஊராட்சி ஒன்றியமாக உருவாக்கியும் மற்றும் 22 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தை பிரித்து 9 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி கூடலூர் ஊராட்சி ஒன்றியம் என்ற ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 13 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி பந்தலூர் என்ற புதிய ஊராட்சி ஒன்றியமாக உருவாக்கியும் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.340, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா—2(1)) துறை, நாள் 04.12.2025 தொடர்பாக அப்பகுதி மக்களிடமிருந்து ஆட்சேபனை ஏதும் பெறப்படாத நிலையில் இறுதி ஆணை மற்றும் அறிவிக்கை வெளியிடுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்பி இறுதி ஆணை மற்றும் அறிவிக்கை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

6. மேற்காண் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்க முடிவு செய்து, நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தில் 26 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 12 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி குந்தா என்ற புதிய ஊராட்சி ஒன்றியமாக உருவாக்கியும் மற்றும் கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 9 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 13 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி பந்தலூர் என்ற புதிய ஊராட்சி ஒன்றியமாக உருவாக்கியும் மறுசீரமைப்பு செய்யப்பட்டதை உறுதி செய்து அரசு ஆணையிடுகிறது.

7. மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி (Census) மேற்கொள்ளும் நோக்கத்திற்காக சமுதாய வளர்ச்சி வட்டங்கள் (CD Blocks), ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட அதிகார வரம்பு மாற்றங்கள் 31.12.2025 முதல் நடைமுறைக்கு வரும். அதனடிப்படையில், இந்த அரசாணையின்படி, பிரிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் எல்லை வரையறை 31.12.2025 முதல் நடைமுறைக்கு வரும்.

8. இவ்வாணையினைத் தொடர்ந்து, 02.02.2026 நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் பின்னிணைப்பில் கண்டுள்ள அறிவிக்கைகளை (I, II, III & IV) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடுமாறு பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை—75 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை—75
(02.02.2026 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் அறிவிக்கை வெளியிட)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை—15.

மாவட்ட ஆட்சித்தலைவர், நீலகிரி மாவட்டம்.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (சென்னை மாவட்டம் நீங்கலாக).

**நகல்**

முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், தலைமைச் செயலகம், சென்னை-9.
நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
2-2-2026

2/2/2026

## APPENDIX.

## NOTIFICATION - I.

In exercise of the powers conferred by clause (i) of sub-section (4) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994), the Governor of Tamil Nadu hereby excludes the local areas specified in the Table below, from the Udhagamandalam Panchayat Development Block so as to constitute them as a separate Panchayat Development Block. Based on the above exclusion, wards will be divided for the next ordinary election.

### THE TABLE

| Name of the Panchayat Union. (1) | Name of the Village Panchayat. (2) |
|---|---|
| Udhagamandalam | 1. Balacola. |
| | 2. Deversholai. |
| | 3. Thangadu. |
| | 4. Denadu. |
| | 5. Ithalar. |
| | 6. Kallakkorai. |
| | 7. Nunthala. |
| | 8. Surender nagar. |
| | 9. Mulligoor. |
| | 10. Emerald. |
| | 11. Mel Kundha. |
| | 12. Kinnakorai. |

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

**// TRUE COPY //**

1.2.2026
**Section Officer.**

2/2/2026

## பின்னிணைப்பு.

## அறிவிக்கை – I

1994–ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15–ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் (1)–ஆம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், உதகமண்டலம் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தை தனி ஊராட்சி வளர்ச்சி வட்டாரமாக ஏற்படுத்துவதற்காக, கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட உள்ளூர் பகுதிகளை உதகமண்டலம் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலிருந்து இதனால் நீக்குகிறார். மேற்சொன்ன பகுதிகள் நீக்கத்தின் அடிப்படையில், அடுத்து வரும் சாதாரண தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

## அட்டவணை

| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். (1) | கிராம ஊராட்சிகளின் பெயர். (2) |
|---|---|
| உதகமண்டலம் | 1. பாலகொலா. |
| | 2. தேவர்சோலை. |
| | 3. தங்காடு. |
| | 4. தேனாடு. |
| | 5. இத்தலார். |
| | 6. கல்லக்கொரை. |
| | 7. நுந்தளா. |
| | 8. சுரேந்தர்நகர். |
| | 9. முள்ளிகூர். |
| | 10. எமரால்டு. |
| | 11. மேல்குந்தா. |
| | 12. கிண்ணகொரை. |

ககன்தீப் சிங் பேடி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

2.2.2026
பிரிவு அலுவலர்.

2/2/2026

## NOTIFICATION - II.

In exercise of the powers conferred by clause (i) of sub-section (4) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994), the Governor of Tamil Nadu hereby excludes the local areas specified in the Table below, from the Gudalur Panchayat Development Block so as to constitute them as a separate Panchayat Development Block. Based on the above exclusion, wards will be divided for the next ordinary election.

## THE TABLE

| Name of the Panchayat Union. (1) | Name of the Village Panchayat. (2) |
|---|---|
| Gudalur | 1. Cherambadi. |
| | 2. Cherangode. |
| | 3. Kaiyunni. |
| | 4. Kappala. |
| | 5. Panachira. |
| | 6. Erumadu. |
| | 7. Pothukolli. |
| | 8. Kallichal. |
| | 9. Kolapalli. |
| | 10. Ayyankolli. |
| | 11. Ammankavu. |
| | 12. Ambalamoola. |
| | 13. Ambalavayal. |

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

**// TRUE COPY //**

2-2-2026
**Section Officer.**

2/2/2026

## அறிவிக்கை – II.

1994–ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15–ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் (1)–ஆம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், கூடலூர் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தை தனி ஊராட்சி வளர்ச்சி வட்டாரமாக ஏற்படுத்துவதற்காக, கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட உள்ளூர் பகுதிகளை கூடலூர் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலிருந்து இதனால் நீக்குகிறார். மேற்சொன்ன பகுதிகள் நீக்கத்தின் அடிப்படையில், அடுத்து வரும் சாதாரண தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

### அட்டவணை

| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர்.<br>(1) | கிராம ஊராட்சிகளின் பெயர்.<br>(2) |
|---|---|
| கூடலூர் | 1. சேரம்பாடி. |
| | 2. சேரங்கோடு. |
| | 3. கையுண்ணி. |
| | 4. கப்பாலா. |
| | 5. பனஞ்சிரா. |
| | 6. எருமாடு. |
| | 7. போத்துக்கொல்லி. |
| | 8. கல்லிச்சால். |
| | 9. கொளப்பள்ளி. |
| | 10. அய்யன்கொல்லி. |
| | 11. அம்மங்காவு. |
| | 12. அம்பலமூலா. |
| | 13. அம்பலவயல். |

ககன்தீப் சிங் பேடி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## NOTIFICATION - III.

In exercise of the powers conferred by sub-section (3) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994), the Governor of Tamil Nadu hereby declares the local areas specified in the Table below, to be a panchayat development block, namely Kundha Panchayat Development Block and also declares the said Panchayat Development Block to be a panchayat union, namely, Kundha Panchayat Union, the intention to declare the same having been published as required under sub-section (1) of section 15 of the said Act. Based on the above constitution of Kundha Panchayat Union, wards will be divided for the next ordinary election.

### THE TABLE

| Name of the Panchayat Union. (1) | Name of the Village Panchayat. (2) |
|---|---|
| Kundha | 1. Balacola. |
| | 2. Deversholai. |
| | 3. Thangadu. |
| | 4. Denadu. |
| | 5. Ithalar. |
| | 6. Kallakkorai. |
| | 7. Nunthala. |
| | 8. Surender nagar. |
| | 9. Mulligoor. |
| | 10. Emerald. |
| | 11. Mel Kundha. |
| | 12. Kinnakorai. |

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

**// TRUE COPY //**

Nandle
2.2.2026
**Section Officer.**

2/2/2026

## அறிவிக்கை – III.

1994-ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15-ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (3)-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-இன் 15-ஆம் பிரிவின் உட்பிரிவு (1)-இன் கீழ் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திற்காக ஒரு ஊராட்சி ஒன்றியம் அதாவது குந்தா ஊராட்சி ஒன்றியத்தை அமைத்துருவாக்குவதற்கு கீழேயுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூர் பகுதிகளை விளம்புகை செய்வதற்கு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுடைய நோக்கத்தை ஈங்கிதனால் அறிவிக்கிறார். மேற்சொன்ன ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் உருவாக்கத்தின் அடிப்படையில் வரும் சாதாரண தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

### அட்டவணை

| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர்.<br>(1) | கிராம ஊராட்சிகளின் பெயர்.<br>(2) |
|---|---|
| குந்தா | 1. பாலகொலா. |
| | 2. தேவர்சோலை. |
| | 3. தங்காடு. |
| | 4. தேனாடு. |
| | 5. இத்தலார். |
| | 6. கல்லக்கொரை. |
| | 7. நுந்தளா. |
| | 8. சுரேந்தர்நகர். |
| | 9. முள்ளிகூர். |
| | 10. எமரால்டு. |
| | 11. மேல்குந்தா. |
| | 12. கிண்ணகொரை. |

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்
2.2.2026

2/2/2026

## NOTIFICATION - IV.

In exercise of the powers conferred by sub-section (3) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994), the Governor of Tamil Nadu hereby declares the local areas specified in the Table below, to be a panchayat development block, namely Pandalur Panchayat Development Block and also declares the said Panchayat Development Block to be a panchayat union, namely, Pandalur Panchayat Union, the intention to declare the same having been published as required under sub-section (1) of section 15 of the said Act. Based on the above constitution of Pandalur Panchayat Union, wards will be divided for the next ordinary election.

### THE TABLE

| Name of the Panchayat Union. (1) | Name of the Village Panchayat. (2) |
|---|---|
| **Pandalur** | 1. Cherambadi. |
| | 2. Cherangode. |
| | 3. Kaiyunni. |
| | 4. Kappala. |
| | 5. Panachira. |
| | 6. Erumadu. |
| | 7. Pothukolli. |
| | 8. Kallichal. |
| | 9. Kolapalli. |
| | 10. Ayyankolli. |
| | 11. Ammankavu. |
| | 12. Ambalamoola. |
| | 13. Ambalavayal. |

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

**// TRUE COPY //**

2.2.2026
**Section Officer.**

2/2/2026

## அறிவிக்கை – IV.

1994–ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15–ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (3)–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–இன் 15–ஆம் பிரிவின் உட்பிரிவு (1)–இன் கீழ் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திற்காக ஒரு ஊராட்சி ஒன்றியம் அதாவது பந்தலூர் ஊராட்சி ஒன்றியத்தை அமைத்துருவாக்குவதற்கு கீழேயுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூர் பகுதிகளை விளம்புகை செய்வதற்கு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுடைய நோக்கத்தை ஈங்கிதனால் அறிவிக்கிறார். மேற்சொன்ன ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் உருவாக்கத்தின் அடிப்படையில் வரும் சாதாரண தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

### அட்டவணை

| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர்.<br>(1) | கிராம ஊராட்சிகளின் பெயர்.<br>(2) |
|---|---|
| பந்தலூர் | 1. சேரம்பாடி. |
| | 2. சேரங்கோடு. |
| | 3. கையுண்ணி. |
| | 4. கப்பாலா. |
| | 5. பனஞ்சிரா. |
| | 6. எருமாடு. |
| | 7. போத்துக்கொல்லி. |
| | 8. கல்லிச்சால். |
| | 9. கொளப்பள்ளி. |
| | 10. அய்யன்கொல்லி. |
| | 11. அம்மங்காவு. |
| | 12. அம்பலமூலா. |
| | 13. அம்பலவயல். |

ககன்தீப் சிங் பேடி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

ப. ரா. [signature] 2.2.2026
பிரிவு அலுவலர்.

[signature] 2/2/2026